04.03.2025

O.S.No. 32/2017

**பி. வா.சா.2 : சம்பத்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த வழக்கில் என்னை 33 வது பிரதிவாதியாக சேர்த்துள்ளார். 14 வது பிரதிவாதி என்னுடைய வளர்ப்பு மகள் என்றால் சரிதான். எனக்கு குழந்தைகள் இல்லாததால் என்னுடைய மூத்த அண்ணனின் மகளை எடுத்து வளர்த்து வருகிறேன் என்றால் சரிதான். மகளுக்கு திருமணம் செய்த வைத்து அவருக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எந்த கிராமத்தை சேர்ந்தது என்றால் வடக்கு காட்டு, முல்லைவாடி கிராமத்தை சேர்ந்தது.

2) தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ராமகவுண்டர் அப்பா பழனி முத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அவருக்கு எத்தனை பிள்ளை என்றால் 3 பெண் பிள்ளைகள், 1 மகன். அவர்கள் முனியம்மாள், மணி, மாரியம்மாள் மற்றும் ராமகவுண்டர். நான் அவர்களிடம் இருந்து சொத்து வாங்கியுள்ளேன் என்றால் பழனிமுத்து கவுண்டரின் மகன் ராமகவுண்டரின் மகளிடம் இருந்து தான் கிரையம் பெற்றுள்ளேன்.

3) அவ்வாறு வாங்கிய சொத்தை எந்த ஆவணத்தின் படி பார்த்து கிரையம் வாங்கினேன் என்றால் பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரத்தின் படி 2010 ல் செய்யப்பட்டதன் அடிப்படையில் நான் 2011 ல் 2 பத்திரமும், 2012 ல் 1 பத்திரமும், 2014 ல் 1 பத்திரமும் வாங்கியுள்ளேன். மேற்படி வாங்கிய சொத்தை யார் யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால்

முனியம்மாள், பரமேஸ்வரி, சின்னம்மாள் மற்றும் மீனாட்சி ஆயோரிடம் இருந்து வாங்கினேன். நான் வாங்கிய சொத்துக்கள் அனைத்து ராமகவுண்டரின் வாரிசுகளிடம் இருந்து தான் வாங்கியுள்ளேன்.

4) அவ்வாறு வாங்கி 4 பத்திரங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் தான். பதிவு செய்யப்பட்ட பின்னிட்டு நான் வாங்கிய பத்திரங்கள் தவறு என்று யாராவது அறிவிப்பு கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. கிரையம் வாங்கிய என் மகள் பெயருக்காவது அவ்வாறு அறிவிப்பு வந்துள்ளதா என்றால் இதுவரை ஒரு அறிவிப்பும் வரவில்லை. பின்னிட்டு என் தரப்பினராக சேர்க்க கோரி நான் மனு தாக்கல் செய்து இருந்தோம்.

5) எப்படி இந்த விவரம் தெரியவந்தது என்றால் 2014 ல் என் நிலத்தை அளக்க போவதாக தெரிவித்தார், அப்போது தான் எனக்கு இந்த விவரம் தெரியவந்தது. நான் கிரையம் வாங்கி பிறகு வழக்கு போடப்பட்டதா அல்லது அதற்கு முன்பு போடப்பட்டதா என்றால் நான் வாங்குவதற்கு 1 மாதம் முன்பு வழக்கு போட்டுள்ளதாக சொன்னார்கள். பத்திரங்கள் அனைத்தும் என் மகள் பெயரில் உள்ளது.

6) மேற்படி வழக்கில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தற்கு பின் என் மகளை தரப்பினராக சேர்க்க கோரி நோட்டீஸ் எதுவும் வந்ததா என்றால் இல்லை. எவ்வித பிரதி பிரயோஜன் இல்லாமல் கிரையம் பத்திரம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் பணம் கொடுத்து தான் கிரையம் பெற்றுள்ளேன். எனக்கு விற்றவர்கள் எனக்கு உறவினர்கள் அல்ல. இருவரும் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள். நான் கிரையம் பெற்ற போது அதில்

யார் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றால் ராமகவுண்டரின் பிள்ளைகள் மட்டும் சுவாதீனத்தில் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் பெண்கள் தான்.

7) நான் இந்த சொத்தை வாங்கும் போது அவர்களிம் சுவாதீனம் இருந்ததால் தான் நான் கிரையமே பெற்றேன். நான் வாங்கிய கிரைய பத்திரங்கள் அனைத்தும் மறுபயன் உள்ள கிரைய பத்திரம் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினை பத்திரம் அரசு பதிவு செய்யப்பட்ட பாக பத்திரம் தான் என்பதால் அதன் அடிப்படையில் நான் மற்ற கிரைய பத்திரங்களை ஆவணங்களை பார்த்து வாங்கினேன் என்றால் சரிதான்.

8) நான் சொத்து வாங்குவதற்கு முன்பு சொத்து உரிய மற்ற பெண் பிள்ளை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இருந்தார்கள் என்றால் தெரியாது. அதை மறைத்து தான் என்னிடம் விற்றுள்ளார்கள். எனவே நான் என் மகளுக்கு பிரதி பலன் கொடுத்து வாங்கி சொத்துக்களை விற்றவர்களுடைய பங்கீடாக என் மகளுக்கு ஒதுக்கவேண்டும் என்று கோரியுள்ளேன்.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

9) நான் லாரி வியாபாரம் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. எம். எஸ் ஆட்டோ கன்செல்டிங் என்ற பெயரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை, லாரி, கார் முதலிவற்றை வாங்க விற்க தொழில் செய்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றும் அதை ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு பாதமாகவிடும் என்பதால் அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10) கவிதா என்பவரை நான் வளர்ப்பு மகளாக தத்து எடுத்துக்கொண்டதற்கான நீதிமன்ற ஆவணமோ, பதிவு பெற்ற தத்து ஆவணமோ செய்யவில்லை என்றால் சரிதான். குழந்தையை 6 மாதத்தில் இருந்து வளர்த்து வருகிறேன். அவர் தற்போது வரை என்னை அப்பா என்று தான் அழைத்து வருகிறார். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் மேற்படி விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தத்து மகள் என்று சொல்லியுள்ளேன்.

11) தாவா சொத்துக்கள் அனைத்து பழனிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவருக்கு 3 மகள்கள், 1 மகன் என்றால் சரிதான். பழனிமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களை அவர் இறக்கும் யாருக்கும் ஆவணங்கள் எழுதி வைக்கவில்லை என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் விலைக்கு வாங்கும் போது நான் வில்லங்க சான்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்றை பார்த்தேன். அதில் பழனிமுத்து கவுண்டர் எதுவும் எழுதிய ஆவணங்கள் பற்றி குறிப்பு இல்லை என்றால் இல்லை. மேற்படி பழனிமுத்து கவுண்டரின் வாரிசுகளுக்கு சமமான பாக மற்றும் உரிமை உள்ளது என்றால் தெரியாது.

12) தாவா சொத்துக்கள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் நிலத்தை கிரயம் பெற்றேன் என்றால் பாக பத்திரத்தின் அடிபடையில் 4 பேருக்கு பாத்தியப்பட்டது. நான் கிரயம் பெற்ற போது அதில் வில்லங்கம் உள்ளதா என்று சட்டக் கருத்துரை பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பாக பத்திரத்தை படித்து

பார்த்தேன். அதில் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றும் அவர் எப்போது இறந்தார் என்றும் வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13) பழனிமுத்து கவுண்டர் இறந்த பின்னிட்டு அவருக்கு எத்தனை வாரிசுகள் என்று தெரிந்து கொள்ளவில்லை. அது பற்றி எனக்கு தெரியாது. பழனி முத்து கவுண்டரின் வாரிசுகள் யார் யார் என்பது எனக்கு தெரியும் என்றும், இந்த பத்திரம் மோசடியானது என்றும் தெரியும் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பழனிமுத்து கவுண்டரின் ஒரு வாரிசான மாரியம்மாள் என்பவர் மற்ற வாரிசுகள் மீது அ.வ.எண். 100/2010 என் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அது பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

14) அ.வ.எண். 100/2010க்கு பின்னிட்டு தான் ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் பாக பிரிவினை எழுதிக்கொண்டார்கள் என்றால் தெரியும். மேற்படி வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு வரும் போது கவிதாவை சேர்க்க கோரிய மனுவில் மதியழகன் வழக்கறிஞராக இருந்தார். தற்போது லட்சாதிபதி இருந்து வருகிறார். அந்த மனுவில் நான் என்னையும் தரப்பினராக சேர்க்க கோரி நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

15) தாவா சொத்தில் நான் பொது அதிகார ஆவணம் பெற்று அதனை பல்வேறு நபர்களுக்கு விற்று உள்ளேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் 4 பேருக்கு விற்று உள்ளேன். அந்த 4 பேர்கள் யார் யார் என்றும், எவ்வளவு விஸ்தீரணத்திற்கு விற்றேன் என்ற விவரத்தை என்னுடைய பிரமாண பத்திரத்தில் சொல்லவில்லை. அதே போல் விற்ற நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி நான் மனு தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் எனக்கு, கவிதாவிற்கும் சுரேஷ் என்ற வழக்கறிஞர் உள்ளார்.

16) அவரை நீதிமன்றத்தில் இன்று ஆஜராகியுள்ளாரா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் சுரேஷ் என்ற வழக்கறிஞரை வைக்கவில்லை என்றும், தயாளன் என்ற வழக்கறிஞர் தான் இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. அதனால் தான் அவர் இந்த வழக்கில் எனக்காக ஆஜராகியுள்ளார் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.03.04 18:26:31 +0530

Subordinate Judge, Attur.